- சட்டங்கள் மீதான வாக்கெடுப்பு: ஒவ்வொரு மாணவரும் நான்கு அடையாளத் துண்டுகள் அல்லது ஒட்டக்கூடிய புள்ளித் துண்டுகள் பெறுவர். அவர் எண்ணப்படி வகுப்புக்கு எவை பொருத்தமோ அவற்றைச் சட்டங்களுடன் சேர்த்துக்கொள்ள முடியும். மாணவர் தாம் விரும்பியபடி தமது புள்ளிகளைப் போட்டுக்கொள்ள முடியும். (எல்லாப் புள்ளிகளையும் ஒரு சட்டத்திற்கு அல்லது தனித்தனியாக 2, 3 அல்லது 4 சட்டங்களுக்குப் போட்டுக்கொள்ளலாம்). வகுப்பு பெரும்பாலான வாக்குகளைப் பெற்ற அந்த நான்கு சட்டங்களையும் ஏற்றுக்கொள்ளும். அவை எல்லா மாணவர்களாலும் ஒப்பமிடப்பட்ட ஒரு சுவரொட்டியில் எழுதப்படும் வகுப்பறையில் எல்லே-ாருக்கும் தெரியக்கூடிய முறையில் அது வைக்கப்படும்.

# 6.6 மனித உரிமைப் பதாகை

**இலக்கு**

*மாணவர் தனிமனித உரிமைகள் பற்றி ஆழமாகக் கலந்துரையாடி ஆராய்வர், அப்படிச் செய்வதனூடாக ஆக்கத் திறன்களையும் வளர்த்துக் கொள்வர்.*

வகுப்பு 4 - 9

45 மணித்துளிகள்

**கருவிகள்:**
பெரிய பணித்தாள்கள். ஊறல் பேனாக்கள், கத்தரிக்கோல், ஒட்டும் பசை, பழைய புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், படங்கள், ஐரோப்பிய மனித உரிமைகள் மாநாட்டு பிரதிகள் அல்லது மனித உரிமைகள் பொதுப் பிரகடனம், (இணையத்தளத்தில் இருந்து பெற முடியும்.)

**நடைமுறை:**

- மாணவர் நான்கு பேர் கொண்ட குழுக்களாக அமர்வர்.
- ஆசிரியர் ஒவ்வொரு குழுவுக்கும் மனித உரிமைகளிலிருந்து ஒவ்வொரு சட்டப் பகுதியை வழங்குவார். மாற்றாக, மாணவர் தாங்களே எந்தச் சட்டப் பகுதியை எடுப்பது என்று தீர்மானிப்பர்.
- ஒவ்வொரு குழுவும் தங்களது மனித உரிமை பற்றிய பதாகையை உருவாக்குவர். பதாகை பின்வரும் பண்புகளை உள்ளடக்கும்:
  - குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனித உரிமைச் சட்டப் பகுதியின் தலைப்பு
  - ஐரோப்பிய மனித உரிமை வழக்கம் அல்லது மனித உரிமைகளின் பன்னாட்டு அறிவிப்பிலிருந்து தொடர்புற்ற எழுத்துருப்பகுதி.
  - அக் குறிப்பிட்ட மனித உரிமையைக் குறியீடாக்கும் ஒரு படம் (குறியீடு, படக்குறியீடு) (எ.கா. தன்னிலையாக இயங்கும் சக்கரம், கட்டற்ற புலப்பாடு மற்றும் பேச்சுக்காக வாய் அல்லது உதடுகள்).
- உயர் வகுப்புக்களுக்கு: தெரிவு செய்யப்பட்ட மனித உரிமை பற்றிய ஒரு பகுப்பாய்வு பின்வருவன தொடர்பாக:
  - இந்த உரிமைக்கு உரித்துடைய மக்கள் மற்றும் இந்த உரிமை யாருக்குக் குறிப்பாக இன்றியமையாதது;
  - அதன் உள்ளடக்கம் (உரிமை எதனை பாதுகாக்கின்றது மற்றும் உறுதிப்படுத்துகின்றது);
  - அதனை முறையே செயற்படுத்தலுக்கும் நடைமுறைப்படுத்தலுக்குமான வழிகள்.
  - இந்த உரிமை மீறல்கள் பற்றி பெறக்கூடிய எடுத்துக்காட்டுகள்.
- மாணவர் தமது பதாகைகளை அளிக்கை செய்து, வகுப்புடன் ஒரு கலந்துரையாடலை நடத்துவர்.